**6 செப்டம்பர் 2026 - பொதுக்காலம் – 23ஆம் ஞாயிறு**

**எசேக் 33:7–9; உரோ 13:8–10; மத்தேயு 18:15–20**

## முன்னுரை

மலையில் கட்டமைக்கப்பட்டு அமைந்திருந்த ஒரு கிராமத்தைப் பற்றிய கதை ஒன்று உண்டு. அங்கிருந்த மக்கள் ஒரு ஆழமான பள்ளத்தாக்கைக் கடக்க ஒரு குறுகிய பாலத்தையே நம்பியிருந்தனர். தினமும் மாலையில், ஒரு முதியவர் விளக்கை ஏந்தியபடி அந்தப் பாலத்தை நோக்கி நடந்து செல்வார். சிலர் அவரைப் பார்த்து, “ஏன் இந்த வீண்வேலை? பாதைதான் எல்லோருக்கும் தெரியுமே!” என்று சிரித்தனர்.

ஆனால், ஒரு நாள் கடும் மூடுபனி நிறைந்த இரவில், கனமழை காரணமாகப் பாலத்தின் ஒரு பகுதி இடிந்து விழுந்திருந்ததை அவரது கைவிளக்கு வெளிப்படுத்தியது. அந்த முதியவர் தன் எளிய கடமையைத் தொடர்ந்து செய்து வந்ததால், பல உயிர்கள் காப்பாற்றப்பட்டன.

இன்றைய இறைவார்த்தை வழிபாட்டு வாசகங்கள் வழியே, நமது விசுவாசம் என்பது ஒருபோதும் தனிப்பட்ட விஷயம் அல்ல என்பதை இறைவன் நமக்கு நினைவூட்டுகிறார்.

எசேக்கியேல் நூலில் வரும் காவலாளியைப் போல, நாம் ஒருவரையொருவர் பராமரிக்கவும், மற்றவர்கள் துன்பப்படும்போதோ அல்லது வாழ்வின் பாதையிலிருந்து விலகிச் செல்லும்போதோ அமைதியாக இராமல் விழிப்போடு இருக்கவும் அழைப்பு விடுக்கப்படுகிறோம்.

தூய பவுல் அடிகளார் கூறுவதுபோல, நாம் செலுத்த வேண்டிய ஒரே கடன், அன்பு என்னும் கடன் மட்டுமே.

கிறிஸ்தவ அன்பு என்பது வெறுமனே உணர்ச்சிப்பூர்வமானதோ அல்லது செயலற்றதோ அல்ல. அந்த அன்பு அடுத்தவரின் நலனைத் தேடுகிறது. சில நேரங்களில் அன்பு ஆறுதல் அளிக்கிறது; சில நேரங்களில் எச்சரிக்கிறது; சில நேரங்களில் பொறுமையோடு கடினமான உண்மையைப் பேசுகிறது.

நம்மை ஒன்றாக இணைக்கும் ஆண்டவரின் திருமுன்னிலையில் நாம் கூடியிருக்கும்இந்த வேளையில், நாம் ஒருவரையொருவர் பராமரிக்கத் தவறிய தருணங்கள், பயத்தினால் மௌனமாக இருந்த தருணங்கள் அல்லது அன்பின்றிப் பேசிய தருணங்களை நினைத்துப் பார்ப்போம்.

ஆண்டவரிடம் இரக்கத்தையும் குணப்படுத்துதலையும் மன்றாடுவோம்.

## மறையுரை

**“நான் என் சகோதரனுக்குக் காவலனா?”**

சில ஆண்டுகளுக்கு முன்பு, கோவிட் பெருந்தொற்றுக் காலத்தில், உலகம் முழுவதும் ஒரு குறிப்பிடத்தக்க மாற்றம் நிகழ்ந்தது.

வழக்கமாகத் தனித்து வாழ்ந்த மக்கள் திடீரென்று மற்றவர்களைப் பற்றிய ஆழமான விழிப்புணர்வைப் பெற்றனர். நம்மைப் பாதுகாத்துக்கொள்ள மட்டுமல்லாமல், மற்றவர்களையும் பாதுகாப்பதற்காக நாம் முகக்கவசங்களை அணிந்தோம்.

தாத்தா பாட்டிகள் ஜன்னல் வழியாகப் பேரக்குழந்தைகளுக்குக் கையசைத்தனர். ஒவ்வொரு திருப்பலிக்குப் பிறகும் தன்னார்வலர்கள் ஆலயங்களைத் தூய்மைப்படுத்தினர்.

பொறுப்பாளர்கள் வாயிலில் நின்று மக்களைப் பாதுகாப்பாக இருக்கைகளில் அமர்த்தினர். தனியாக வாழ்ந்த முதியவர்களை அண்டை வீட்டார் விசாரித்து உதவி செய்தனர்.

கண்ணுக்குத் தெரியாத ஒரு நச்சுயிரி (வைரஸ்) மனிதகுலத்திற்கு ஓர் ஆன்மீக உண்மையைக் கற்பித்தது; அதைத்தான் நற்செய்தியும் தொடக்கத்திலிருந்தே கற்பித்து வருகிறது:

**“நான் செய்யும் செயல் மற்றவர்களைப் பாதிக்கிறது.”**

நம்மில் யாரும் தனித்து வாழ்வதில்லை; யாரும் தனித்துப் பாவம் செய்வதில்லை; யாரும் தனித்து விசுவாசிப்பதில்லை. நாம் அனைவரும் ஒருவருக்கொருவர் உரியவர்கள்.

இந்த உண்மை இன்றைய மூன்று வாசகங்களிலும் ஒரு பொன்னான நூலைப்போல இழையோடுகிறது.

**காவலாளியாகிய எசேக்கியேல்**

முதல் வாசகத்தில் இறைவன் இறைவாக்கினர் எசேக்கியேலிடம் கூறுகிறார்:

பண்டைய காலத்தில் நகரங்களில் காவலாளி என்பவர் மிகவும் அத்தியாவசியமானவர். அனைவரும் தூங்கும்போது அவர் விழித்திருந்தார். மக்கள் அன்றாட வாழ்க்கையில் மூழ்கியிருந்தபோது, அவர் எல்லைகளைக் கண்காணித்துக்கொண்டிருந்தார்.

எதிரி நெருங்கி வரும்போது காவலாளி மௌனமாக இருந்தால், அங்கு பேரழிவு ஏற்படும்.

நமது கடலோரங்களில் படையெடுப்பைக் கண்காணிக்க அமைக்கப்பட்ட காவல் கோபுரங்களைப் போலவும், நிலநடுக்கம் அல்லது புயல்களை முன்கூட்டியே எச்சரிக்கும் நவீன அமைப்புகளைப் போலவும் இறைவாக்கினரின் பங்கு அமைகிறது.

ஆபத்தைப் புறக்கணிப்பது பேரழிவிற்கு வழிவகுக்கும் என்பதால்தான் நாம் எச்சரிக்கை அமைப்புகளை உருவாக்குகிறோம்.

இறைவன் எசேக்கியேலிடம், “**ஆன்மீக ரீதியில் காவல் காப்பதே உனது பங்கு**” என்கிறார்.

இறைவாக்கினரின் அழைப்பு மக்களைக் கண்டிப்பது அல்ல; மாறாக, அவர்களை எச்சரிப்பதும், விழிப்படையச் செய்வதும், வாழ்வுக்குத் திரும்ப அழைப்பதுமாகும்.

இறைவன் மக்களை அழிப்பவர் அல்ல; அவர் அன்புள்ள தந்தை. அழிவை அல்ல, வாழ்வையே அவர் விரும்புகிறார் என்பதால்தான் எச்சரிக்கிறார்.

எசேக்கியேல் குறிப்பிடுவதுபோல:

**“தீயோரின் சாவில் எனக்கு விருப்பமில்லை; மாறாக, தீயோர் தம் வழிகளிலிருந்து விலகி வாழ வேண்டும் என்பதிலேயே நான் விருப்பம் கொள்கிறேன்.”**

இறைவன் நம்மை அன்பு செய்வதாலேயே நம்மை எச்சரிக்கிறார்.

**“நான் என் சகோதரனுக்குக் காவலனா?”**

காயீன் தன் சகோதரன் ஆபேலைக் கொன்ற பிறகு, இறைவன் அவனிடம், **“உன் சகோதரன் எங்கே?”** என்று கேட்டார்.

அதற்குக் காயீன், **“நான் என் சகோதரனுக்குக் காவலனோ?”** என்று பதிலளித்தான்.

அதற்கு நற்செய்தி தரும் விடை:

**ஆம், நாம் காவலர்களே!**

அதிகாரம் செலுத்தும் விதத்திலோ அல்லது தீர்ப்பு அளிக்கும் விதத்திலோ அல்ல; மாறாக, அன்பான, பொறுப்புள்ள வழியில் நாம் காவலர்களாக இருக்க வேண்டும்.

**அன்பு – நாம் செலுத்த வேண்டிய ஒரே கடன்**

தூய பவுல் அடிகளார் இவ்வாறு கூறுகிறார்:

**“ஒருவருக்கொருவர் காட்டும் அன்புக் கடனைத் தவிர, வேறு எவருக்கும் எதுவும் கடன்படாதீர்கள்.”**

நாம் செலுத்தி முடிக்க முடியாத ஒரே கடன் அன்புதான்.

இறைவனின் அன்பு ஒருபோதும், **“போதும், இதோடு முடிந்தது!”** என்று சொல்வதில்லை.

இறைவன் நம்மை எல்லையற்ற அன்போடு நேசிப்பதால், நாமும் ஒருவரையொருவர் அதே தளராத அன்போடு நேசிக்க அழைக்கப்படுகிறோம்.

**இரு தவறான வழிகள்**

தவறு செய்யும் ஒரு சகோதரரையோ சகோதரியையையோ எவ்வாறு திருத்துவது என்பது பற்றி இன்றைய நற்செய்தி பேசுகிறது.

ஆனால், இயேசு இதைச் செய்வதில் மிகவும் கவனமாக இருக்க வழிகாட்டுகிறார்.

நாம் வழக்கமாக இரண்டு தவறான தீவிரநிலைகளில் விழுகிறோம்.

**முதல் தவறு – மௌனம்**

ஒருவர் தவறான பாதையில் சென்று தன்னைத்தானே அழித்துக்கொள்வதைப் பார்க்கும்போது, “**இது என் வேலையல்ல**” என்று அமைதியாக இருந்துவிடுகிறோம்.

ஆனால், உண்மையான அன்பு எப்போதும் மௌனமாக இருக்க முடியாது.

ஆபத்தை நோக்கிச் செல்லும் குழந்தையைக் கண்டால், பெற்றோர் எச்சரித்துக் குரல் கொடுப்பார்கள்.

உண்மையான அன்பு சில நேரங்களில் கடினமான உண்மைகளைப் பேசத் தயங்குவதில்லை.

**இரண்டாம் தவறு – புறணி பேசுதல்**

சம்பந்தப்பட்ட நபரிடம் நேரடியாகப் பேசுவதற்குப் பதிலாக, அவரைப் பற்றி மற்றவர்களிடம் பேசுகிறோம்.

**புறணி பேசுவது என்பது கவலைப்படுவதுபோல் வேடமிடும் கோழைத்தனம்.**

இயேசு இதற்கான சரியான வழியைக் காட்டுகிறார்:

முதலில், தனிமையில் பேசுங்கள்.

தேவைப்பட்டால், பிறரையும் அன்போடு ஈடுபடுத்துங்கள்.

ஆனால், நமது நோக்கம் அவமானப்படுத்துவதாக இருக்கக்கூடாது; மாறாக, குணப்படுத்துவதாக இருக்க வேண்டும்.

நற்செய்தியில் கூறுவதுபோல, இதன் நோக்கம் “**சகோதரரை மீட்டெடுப்பதே**” ஆகும்.

அவரைத் தோற்கடிப்பதோ, அவமானப்படுத்துவதோ அல்ல; உறவைக் காப்பாற்றுவதே இதன் இலக்கு.

**துணிவோடு பேசும் அன்பு**

ஒரு ஆசிரியர் தன் மாணவன் ஒருவன் படிப்பில் கவனமின்றி, கோபமும் தனிமையும் கொண்டு இயல்பிலிருந்து மாறுவதைக் கவனித்தார்.

அதை அலட்சியப்படுத்துவது எளிது. ஆனால், அந்த ஆசிரியர் அவனை அழைத்துத் தனியாகப் பேசினார்.

முதலில் அந்த மாணவன், “**ஏன் என் விஷயத்தில் தலையிடுகிறீர்கள்?**” என்று கேட்டான்.

ஆனால், ஆசிரியர் காட்டிய அன்பைக் கண்டு, தன் பெற்றோர் பிரியப்போவதாகவும், அதனால் தான் உடைந்துபோயிருப்பதாகவும் கூறி அழுதான்.

பல ஆண்டுகளுக்குப் பிறகு அந்த இளைஞன்,

**“அந்த உரையாடல் என்னைக் காப்பாற்றியது. யாரோ ஒருவர் என் நலனில் அக்கறை கொள்கிறார் என்பதை அன்றுதான் நான் உணர்ந்தேன்”**

என்றான்.

சில நேரங்களில் நாம் செய்யக்கூடிய மிகப்பெரிய அன்பின் செயல், சற்றே சங்கடமான ஓர் உரையாடலைத் தொடங்கும் துணிவைப் பெறுவதாகும்.

தூய பவுல் அடிகளார் கூறுவதுபோல:

**“அன்பு அடுத்தவருக்குத் தீங்கு செய்யாது.”**

மெய்யான அன்பு என்பது உண்மையையும் அன்பையும் ஒன்றாகக் கொண்டிருப்பதாகும்.

**ஆன்மீக ரீதியில் நாம் ஒருவரையொருவர் பாதிக்கிறோம்**

நம்மில் யாரும் கடவுளை நோக்கிய பயணத்தில் தனியாகப் பயணிப்பதில்லை.

ஜெபித்த பாட்டி,

நம்மை நம்பிய ஆசிரியர்,

செவிமடுத்த ஒரு குரு,

ஊக்கப்படுத்திய ஒரு நண்பர் –

இவர்கள் அனைவரும் நம்மை இறைவனுக்கு நெருக்கமாகக் கொண்டுவர உதவியவர்கள்.

நாமும் ஒவ்வொருவரும் மற்றொருவரின் ஆன்மீக வாழ்வில் நன்மையையோ அல்லது தீமையையோ ஏற்படுத்தும் செல்வாக்கைக் கொண்டிருக்கிறோம்.

நாம் கிறிஸ்துவை வெளிச்சமிட்டுக் காட்டும் ஜன்னல்களாக மாறலாம்; அல்லது அவரை மறைக்கும் சுவர்களாக மாறலாம்.

**கிறிஸ்துவில் வாழும் உடலாகத் திருச்சபை**

தூய பவுல் அடிகளார் திருச்சபையைக் கிறிஸ்துவின் உடலாகப் பார்க்கிறார்.

உடலின் ஓர் உறுப்புத் துன்புற்றால், முழு உடலும் துன்புறுகிறது. ஓர் உறுப்புநலமோடு இருந்தால், முழு உடலும் பயனடைகிறது.

அதாவது:

**உங்கள் ஜெபம் திருச்சபையைப் பலப்படுத்துகிறது.**

**உங்கள் இரக்கம் திருச்சபையைப் பலப்படுத்துகிறது.**

**உங்கள் விசுவாசம் திருச்சபையைப் பலப்படுத்துகிறது.**

அதேபோல, மறைமுகமான கசப்பும் சுயநலமும் திருச்சபையைப் பலவீனப்படுத்துகின்றன.

நாம் ஆன்மீக ரீதியில் ஒருவருக்கொருவர் கட்டுப்பட்டவர்கள்.

**நிறைவுக்கதை**

ஆபத்தான பாறைகள் நிறைந்த கடற்கரையில் இருந்த ஒரு கலங்கரை விளக்கக் காவலரைப் பற்றிய பழைய கதை ஒன்று பரவலாகப் பேசப்படுகிறது.

கலங்கரை விளக்கத்தை எரிய வைப்பதற்காக, அவருக்கு மாதந்தோறும் குறிப்பிட்ட அளவு எண்ணெய் மட்டுமே வழங்கப்படும்.

ஒருநாள் இரவு, அண்டை வீட்டான் ஒருவன் தன் வீட்டு விளக்கிற்கு எண்ணெய் கேட்டான்; மற்றொருவன் சமைக்கவும், வேறொருவன் குளிர்காயவும் எண்ணெய் கேட்டான்.

காவலர் அனைவருக்கும் கொஞ்சம் கொஞ்சமாகக் கொடுத்தார்.

மாதத்தின் இறுதியில் எண்ணெய் தீர்ந்துபோனது.

அன்று இரவு கலங்கரை விளக்கம் இருண்டது. ஒரு கப்பல் பாறையில் மோதி விபத்துக்குள்ளாகி, பல உயிர்கள் பலியாயின.

விசாரணையில், “**கலங்கரை விளக்கக் காவலர் தன் முதன்மையான கடமையில் தவறிவிட்டார்**” என்று முடிவு செய்யப்பட்டுத் தண்டனை வழங்கப்பட்டது.

அன்பார்ந்த சகோதர சகோதரிகளே,

ஒவ்வொரு கிறிஸ்தவரும் ஆன்மீக ஒளியை எரிய வைக்க அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

நாம் ஒருவரையொருவர் கவனித்துக்கொள்ளவும், ஜெபிக்கவும், ஊக்கப்படுத்தவும், தாழ்மையோடும் அன்போடும் திருத்தவும், கிறிஸ்துவை நோக்கி வழிநடத்தவும் அழைக்கப்பட்டுள்ளோம்.

கடினமாக அல்ல; சுயநீதியோடு அல்ல; இயேசுவின் இதயத்தோடு இதைச் செய்வோம்.

ஏனெனில், கிறிஸ்தவம் என்பது “**நானும் கடவுளும்**” மட்டுமே சார்ந்ததல்ல.

அது கிறிஸ்துவில் ஒன்றாக இணைந்த உடலாக மாறுவதாகும்.

அங்கே யாரும் தனியாக நடப்பதில்லை.

யாரும் கைவிடப்படுவதில்லை.

யாரும் உண்மையின் மற்றும் அன்பின் கரங்களுக்கு அப்பாற்பட்டவர்கள் அல்ல.

நாம் அவ்வாறு வாழும்போது, இயேசுவின் வாக்குறுதி உண்மையாகிறது:

**“இரண்டு அல்லது மூன்று பேர் என் பெயரால் எங்கே கூடியிருக்கின்றார்களோ, அங்கே அவர்களிடையே நானும் இருக்கிறேன்.”**

**ஆமென்.**

**Prepared by: Fr. Paul Julian, Perth, Australia**

**Translated by: Leonard Arulandhu, Holy Family Church, Chennai**